DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 730/2018
*****

Deposition of Witness for Prosecution witness No: PW7

LW11

| | | |
|---|---|---|
| Name | : | **ராமேஸ்வரி** |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | **07.08.2026** |

**( A1 to A3 died. A4 absent. For A4 317 crpc petition filed and allowed. )**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், மாவட்ட குற்ற ஆவண காப்பகத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 20.12.2010 ம் தேதி சங்கரன்கோவில் நகர் காவல்நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அப்பொழுது சங்கரன்கோவில் நகர் காவல்நிலைய குற்ற எண். 536/2010 சட்டப்பிரிவு 489–A, 489–B, 489–C, 489–D இதச பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு காவல்ஆய்வாளர் இவ்வழக்கின் எதிரியான ஸ்ரீவில்லிப்புத்தூர் வத்திரயிருப்பு சுப்பையா தேவர் மனைவி லட்சுமி என்ற பிச்சம்மாள் என்றவரை 20.12.2010 ம் தேதி பகல் 11.30 மணிக்கு காவல்நிலையத்தில் வைத்து விசாரித்து வந்தபோது நான் உடன் இருந்தேன்.

மேற்படி எதிரியான லட்சுமி என்பவர் காவல் ஆய்வாளரிடம் தாமாக முன்வந்து எந்தவித துன்புறுத்தலோ, தூண்டுதலோ இன்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். சாட்சிகள் சங்கரன்கோவில் நகர் கிராம நிர்வாக அலுவலர் இருதலைய மருதப்ப பாண்டியன், கிராம உதவியாளர் திரு.கணேசன் ஆகியோர் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தபோது உடன்இருந்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னிடம் விசாரணை செய்தார்.

**4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பொதுவாக எதிரியிடம வாக்குமூலம் பதிவு செய்யும்போது யார் யார் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது அவர்கள் காவல்நிலையத்தில் பராமரிக்கப்படும் General diary யில் கையொப்பம் செய்வார்கள் என்றால் General diary யில் கையொப்பம் செய்யமாட்டோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் கையொப்பம் வாங்குவோம். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் வாங்குவது சம்பந்தமாக காவல்நிலையத்தில் ஆவணங்கள் உள்ளதா என்றால் அதுகுறித்து வழக்கு பதிவேட்டில் தான் பதிவு செய்யப்படும். வழக்கு நாட்குறிப்பில் கையொப்பம் எதுவும் பெறமாட்டோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் கையொப்பம் பெறுவோம். நீங்கள் கூறுவது போல் பொது நாட்குறிப்பில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யும் போது யார் யார் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்யப்படுமோ அவர்கள் கையொப்பம்செய்வார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் பராமரிக்கப்படாததால் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்வது எத்தனை மணிக்கு தொடங்கி எத்தனை மணிக்கு முடியும் என்ற விவரம் துலங்கும் என்றால் சரிதான். அதேபோல் அன்றைய தேதியில் அலுவல் பணி குறித்து நான் என்னுடைய டைரி குறிப்பில் பதிவு செய்தேன் என்றால் பதிவு செய்துள்ளேன்.

மேற்படி டைரியை விசாரணை அதிகாரியிடம் சமர்பித்தேனா என்றால் சமர்ப்பித்தேன். நான் சொன்ன நாள் நேரத்தில் வழக்கில் கண்ட 1ம் எதிரியான லட்சுமி என்ற பிச்சையம்மாள் என்றவரிடம் என் முன்னிலையிலும் கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் முன்னில் ஒப்புதல் வாக்குமூல்ம் பெறப்பட்டதாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. அன்றைய தேதியில் நான் காவல்நிலையத்தில் இல்லை என்றால் சரியல்ல.